# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1818 - 2013 ජූලි මස 05 වැනි සිකුරාදා - 2013.07.05

*1818 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 890 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 897 |


**கவனிக்க.**- (i) கல்ஹின்ன ஜாமிஅதுல் பத்தாஹ் அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, மே மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) பண்டகசாலை கருத்திட்டம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, மே மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) செரெட்செ காமா மன்றம் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, மே மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, யூலை மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, யூலை மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு துபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழி மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - திருகோணமலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, ஆவணி மாதம் 05 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, ஆனி 14.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| திருகோணமலை | மூதூர் | கொட்டியார் மேற்கு பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கொட்டியார்பற்று பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், திருகோணமலை |

7-03

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

*2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.*

*3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.*

*4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.*

*5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.*

*6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.*

*7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, ஆவணி மாதம் 12 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.*

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, ஆனி 19.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தறை | அக்குரஸ்ஸ | வெலிகம் கோரளை அக்குரஸ்ஸ பிரிவில் (பொது) விவாகப் பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், மாத்தறை |
| மாத்தறை | வெலிகம | மீற்றிகம பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வெலிகம் கோரளை பிரிவில் (பொது) விவாகப் பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், மாத்தறை |

7-176

---

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் சிறு வியாபார அபிவிருத்திப் பிரிவில் நிறைவேற்று உத்தியோகத்தர் மட்டத்தில் உதவிப் பணிப்பாளர் (திணைக்கள) பதவிக்கான மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு

*இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின்கீழ் காணப்படும் சிறு வியாபார அபிவிருத்திப் பிரிவில் வெற்றிடமாகக் காணப்படும் 14 உதவிப் பணிப்பாளர் (திணைக்கள) பதவிகளை நிரப்புவதற்காக தகைமை கொண்டுள்ள உள்ளக விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*1. **ஆட்சேர்ப்பு முறை**.- சிறு வியாபார அபிவிருத்திப் பிரிவில் சேவையாற்றும், இவ்வறிவித்தலின் 4 ஆவது பிரிவில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கீழே அட்டவணை 5 இல் காட்டப்பட்டுள்ள குறிப்பிடப்படும் புள்ளி வழங்கும் முறைமையினை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பதாரிகளை முறையான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.*

*2. **சேவை நிபந்தனைகள்**.- பதவியின் தன்மை நிரந்தரமானது, ஓய்வூதியம் உரித்துடையது. அரசாங்க ஊழியர்களின் நியமனத்தை கட்டுப்படுத்தும் பொது நியமங்களுக்கும் தாபனக்கோவை மற்றும் 2009.02.20 ஆந் திகதியிலான இலக்கம் 1589/30 கொண்ட பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும். அரசாங்க மொழி அல்லாத மொழியில் சேவையில் இணைந்துகொண்ட உத்தியோகத்தர்கள் குறித்த*

அரசாங்க மொழியில் தேர்ச்சியினை தகுதிகாண் காலத்தினுள் பெற்றுக்கொள்ள வேண்டும். பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 07/2007 மற்றும் அதனோடிணைந்த சுற்றறிக்கைகளுக்கு இணங்க, குறித்த மட்டத்தில் ஏனைய அரசாங்க மொழியில் தேர்ச்சிபெற வேண்டும்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- சம்பள குறியீட்டு இலக்கம் - எஸ்எல் 1 - 2006 (சம்பள அளவுத்திட்டம் ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 (மாதாந்தம்) பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இற்கு இணங்க சம்பளம் வழங்கப்படும்.

4. **தகைமைகள் :**

(i) முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருக்க வேண்டும்.

(ii) முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் பதவியில் 10 வருட செயற்பாடான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

(iii) முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன் காண் பரீட்சையில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

(iv) தகுதி பெறும் திகதிக்கு அண்மித்த ஐந்து (05) வருடங்களில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

5. **நேர்முகப் பரீட்சை**.- நேர்முகப் பரீட்சையில் உயர் புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரிகளில் இருந்து காணப்படும் வெற்றிடங்களுக்கு சமமான எண்ணிக்கையானவர்கள் இணைத்துக்கொள்ளப்படுவர்.

வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுதல் அல்லது ஒரு பகுதியினை மட்டும் நிரப்புதல் தொடர்பான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

| தலைப்பு | உயர்ந்த புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1. **மேலதிக அனுபவத்திற்காக** | 50 |
| * அடிப்படைத் தகுதியான 10 வருட சேவைக்காலத்தின் பின்னர் காணப் படும் சேவைக்காலத்திற்கு ஒரு வருடத்திற்கு 5 புள்ளிகள் வீதம் | |
| 2. **மேலதிக கல்வித் தகைமைக்காக** | 20 |
| * அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழ கத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப் பட்ட குறித்த துறையில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமாவுக்கு (முகாமைத் துவம், பொருளாதார விஞ்ஞானம், வணிகம், வியாபார நிர்வாகம், தகவல் தொழில்நுட்பம், புள்ளிவிபரவியல் அல்லது விவசாய விஞ்ஞானம் ஆகிய விடயங்கள்) | 15 |
| * அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவ னத்தின் மூலம் வழங்கப்படும் ஒரு வருடத்திற்கு குறையாத கணனி தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா/ சான்றிதழ் பாடநெறிக்கு | 5 |
| * அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவ னத்தின் மூலம் வழங்கப்படும் ஆறு மாதத்திற்கு குறையாத கணனி தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பாடநெறிக்கு | 3 |
| 3. **நிர்மாணத்துவ செயற்பாடுகள் மற்றும் விசேட திறமைகள்** | 25 |
| * தற்போது சிறு வியாபார அபிவிருத் திப் பிரிவு அடையாளங் காணாத எனினும் முயற்சியாண்மையாளர் களுக்கு உபயோகமான அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்பு களின் ஒத்துழைப்புடன் ஒழுங்கு செய்த நிகழ்ச்சிகள் நடாத்தியதற்காக ஒரு நிகழ்ச்சிக்கு 3 புள்ளிகள் வீதம் | 09 |
| * மாவட்டங்களுக்கு இடையிலான வியாபார பரிமாற்றல் நிகழ்ச்சி போன்ற விசேட நிகழ்ச்சி (உதா- நுவரெலியா மலர் வளர்ப்பவர் களுக்கு மலர் வியாபாரத்திற்காக கொழும்பு மாவட்டத்தின் முயற்சி யாண்மையாளர்களை அறிமுகப் படுத்தல், மொனராகலை மாவட் டத்தின் தானியப் பயிர்ச்செய்கை யாளர்களை ஹோமாகம பல் வகை சேவைகள் கூட்டுறவுச் சங்கத்துடன் தொடர்புபடுத்தல்) ஒரு நிகழ்ச்சிக்கு 2 புள்ளிகள் வீதம் | 06 |
| * பிரதேச வளங்களை அடையாளங் கண்டு அதற்கிணங்க முயற்சியாண் மையாளர்களை அவ் வியாபாரத்திற் குத் தூண்டுதல் (ஏற்றுமதிக்காக சிறு உற்பத்தியாளர்களை வழிப்படுத்தல், மலர் வளர்ப்பினை வியாபாரமாக மாற்றும் செயற்பாடு, கீரை வளர்ப்பு, கிலோ கொய்யா வளர்ப்பு, குளத்துடன் தொடர்புபட்ட நன்னீர் மீன் வளர்ப்பு, தேசிய மருந்து வகைகள்) போன்ற விசேட செயற்திட்டங்களுக்காக ஒரு நிகழ்ச்சிக்கு 2 புள்ளிகள் வீதம் | 10 |
| 4. **நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை** | 5 |
| மொத்தப் புள்ளிகள் | 100 |

6. **தெரிவுசெய்யும் முறை**.- நேர்முகப் பரீட்சையில் உயர் புள்ளிகள் பெற்ற திறமை அடிப்படையில் அடிப்படைத் தகைமை கொண்டுள்ளவர்கள் தெரிவுசெய்யப்படுவர். விண்ணப்பதாரிகள் பலருக்கு ஒரே புள்ளிகள் கிடைத்திருப்பின் தெரிவுசெய்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் காணப்படும்.

6. **விண்ணப்பிக்கும் முறைமை.**- கீழ்க்காட்டப்படும் மாதிரிப் படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட சகல விண்ணப்பப்படிவங்களும் 2013, ஓகத்து 02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு, 'நிபுணதா பியச', இலக்கம் 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உதவிப் பணிப்பாளர் (திணைக்கள) பதவி" என தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள்
அபிவிருத்தி அமைச்சு.

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு,
"நிபுணதா பியச",
இலக்கம் 354/2, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

*இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் சிறு வியாபார அபிவிருத்திப் பிரிவில் நிறைவேற்று உத்தியோகத்தர் மட்டத்தில் உதவிப் பணிப்பாளர் (திணைக்கள) பதவிக்கான மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு*

1. முழுப்பெயர் :----.

2. தனிப்பட்ட முகவரி :----.

3. தொழில் முகவரி :----.

4. பிறந்த திகதி :----.

5. முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் பதவியில் நியமனம் பெற்ற திகதி :----.

6. முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் பதவியுடன் தொடர்புடைய வினைத்திறன் தடைத்தாண்டல் தொடர்பான விபரம் :

   6.1 முதலாவது வினைத்திறன் தடைத்தாண்டலில் சித்தியடைந் துள்ளீரா ? :----.

   6.2 இரண்டாவது வினைத்திறன் தடைத்தாண்டலில் சித்தியடைந் துள்ளீரா ? :----.

மேற்குறித்த தகவல்கள் உண்மையானதென உறுதிகூறுகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் பரிந்துரை :**

திரு./திருமதி/செல்வி ................................................................ இத்திணைக்களத்தில் பணிபுரிகின்றார் எனவும், விண்ணப்பப்பத்திரம் கோரும் திகதிக்கு அண்மித்த ஐந்து வருடங்களில் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருக்கின்றார் எனவும் அண்மித்த ஐந்து வருடங்களில் சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுக்கொண்டுள்ளார் எனவும், அறிவுறுத்தல் அன்றி வேறு தண்டனைக்கு உட்படவில்லை எனவும், இலக்கம் 1 முதல் 6 வரை தரப்பட்டுள்ள தகவல்கள் அவரின் தனிப்பட்ட ஆவணக் கோவைக்கு இணங்க சரியானது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி :----.

7-61

---

## இலங்கை பொலிஸ் திணைக்களம்

பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் பொருட்டு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர்" (ஆட்சேர்ப்பு), பயிலுனர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினை குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2013.09.20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது, என்பதுடன் பொலிஸ் திணைக்களத் தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 1,71,360 - 7 x 1,740 - 10 x 2,160- 17 x 2,880 - ரூபா 2,54,100.

மேற்கூறப்பட்ட சம்பள அளவுத் திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதந்தோறும் வழங்கப்படும் :-

(அ) கடினக் கொடுப்பனவுகள் ரூபா 2,000 ;

(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :

   (1) வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 10,500 ;
   (2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 8,400.

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டும் நிதி உதவிகள் வழங்கப்படும்) ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும் ;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள் கஷ்டப் பிரதேசங்களில் சேவையாற்றுவதற்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும் ;

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) வயதெல்லை.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள்.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம் மற்றும் ஊடக மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகள் முதலாவது தடவையில் ஒரே தடவையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42 மற்றும் 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும்.

**குறிப்பு 2.**- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராக கருதப்படும்.

**குறிப்பு 3.**- விருப்பத்திற்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) உடல் தகுதித் தேவைப்பாடுகள் :

* உயரம் : 5 அடி 2 அங்குலம் (ஆகக் குறைந்தது)

**குறிப்பு 1.**- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உடல் தகுதித் தேவைப்பாடுகள் குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையின்படி தகைமை பெறுவர்.

(ஈ) பார்வை தொடர்பான தேவைப்பாடு :

ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/ 6 ஆகவும் மற்றைய கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்துவில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) பிற தகைமைகள்.- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமானவர்களாகக் கருதப்படுவர்).

**5. ஆட்சேர்ப்பு முறை.**- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிகாண் பரீட்சையில் பங்குபற்றலாம் அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

மீற்றர் 1000 - 05 நிமிடங்கள் 14 விநாடிகள்.

பௌதிகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரமே இறுதி எழுத்துமூலப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(i) இவ் எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :-

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக கட்டுரை எழுதுதல் ;

* பொது அறிவும் நுண்ணறிவும் (01 மணித்தியாலம்.)

**6. வைத்தியப் பரீட்சை.**- முன்னுரிமைப் பட்டியல் மற்றும் திறமை ஒழுங்கிற்கு அமைவாக தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன்னர் வைத்தியப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பரீட்சையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

**7. பின்னணி விசாரணைகள்.**- (அ) விண்ணபதாரரின் நன்நடத்தையை உறுதிப்படுத்த அவரின், அவரின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

**8. அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தல் :**

- பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007 ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம் 2007.01.01 ஆந் திகதியில் இருந்து அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியிலும், சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்பட்ட அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்கள் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை சம்பள ஏற்றங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

9. **பதவியிலமர்த்தும் நியதிகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். நீங்கள் விதவைகள்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கும் உரித்துடையவர்.

10. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் காலத்தை அடிப்படையாகக் கொண்டது.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரச கரும மொழிக் கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் I ஆம், II ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி, ஒழுங்குவிதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவார்.

(ஈ) பதவி நிரந்தரமாவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத் தர்களுக்கும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(உ) பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் நிரந்தரமாக்கும் வரை திருமணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது. எனினும் 1973.02.28 ஆந் திகதி 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானியின் பகுதி II இன் பிரகாரமும் மற்றும் 1952/2006 ஆம் இலக்க 2006.10.19 ஆந் திகதிய 2007.08.09 (திருத்தப்பட்டது) ஆந் திகதியுடைய பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் திருமணம் செய்வதற்கான விசேட காரணங்களை தெரிவித்து பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் காலநிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடை வதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் காலம்வரை அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை மற்றும் ஏனையவைகள் தொடர்பில் ஏற்பட்ட செலவினங்களை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடல் வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்வதானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) ஆட்சேர்க்கப்படும் பயிலுனர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் உடனடியாக, 1693/2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபத்திற்கு இணங்க பொலிஸ் ஒழுக்காற்றுக் கோவையினை பின்பற்றுவதாக பிரமாணம் செய்தல் வேண்டும்.

(ஏ) ஆட்சேர்க்கப்படும் பயிலுனர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் உடனடியாக, பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) ஆட்சேர்க்கப்படும் பயிலுனர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி நிரந்தரமான பின்னர் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு வாய்ப்புண்டு.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இல் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. **விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும். (மூல ஆவணங் கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது)** :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டவை) ;

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்கு புறம்பாக பெற்ற சான்றிதழ்கள் ;

(உ) சேவையில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்);

(ஊ) தேசிய அடையாள அட்டையின் நிழற்பிரதி.

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் இச்சான்றிதழ் இல்லாமல் விண்ணப்பம் அனுப்பினால் அது நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11 x 8 அங்குல அளவில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி சான்றிதழ்களது பிரதிகளுடன் இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இத்திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

*பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி*

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
(தேசிய அடையாள அட்டையின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் -

மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(உ) நிரந்தர முகவரிக்குரிய தேர்தல் தொகுதி :-----.
(ஊ) நிரந்தர முகவரிக்குரிய பிரதேச செயலாளர் பிரிவு/ கிராமசேவையாளர் பிரிவு :----.
(ஏ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----, கையடக்க தொலைபேசி இல. :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருப வர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின்தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----;

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா? திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-----.

(அ) -----.
(ஆ) -----.

15. (அ) நீங்கள் இதற்கு முன்னர் றிசேவ் பொலிஸ் சேவையில் அல்லது நிரந்தர பொலிஸ் சேவையில் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா? (ஆம் எனின் அது தொடர்பான விபரங்களைத் தருக) :-----.

(ஆ) நீங்கள் இதற்கு முன்னர் இலங்கை நிரந்தர பொலிஸ் அல்லது றிசேவ் பொலிஸ் சேவையில் கடமையாற்றியுள்ளீரா? (ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங் களைக் குறிப்பிடுக? :-----.

16. நீங்கள் தற்போது றிசேவ் பொலிஸ் சேவையில் சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவிநிலை மற்றும் இலக்கம் போன்ற விபரங்களினைக் குறிப்பிடுக (நியமனக் கடிதத்தின் பிரதியை இணைக்குக :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப் படைதாங்கு சேவையில் சேவையாற்றுகிறீரா ? : -----. (அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்பப்படல் வேண்டும்).

(ஆ) நீங்கள் ஆயுதப் படைதாங்கு சேவையில் சேவையாற்றியுள் ளீரா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப் பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்க வேண்டும் :-----.

18. (அ) நீங்கள் படைதாங்கு சேவையில் தொண்டர் படையினராக சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படை தாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் சேவை யாற்றியுள்ளீரா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் : -----.

19. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட் டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தமான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரங்களைத் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

6-62

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சு

### ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறியைப் பின்பற்றுவதற்காக ஆசிரியர்களைத் தெரிவு செய்தல் - 2013/2014

1. ஆசிரியர் கல்லூரிகளில் ஈராண்டு கால ஆசிரியப் பயிற்சி நெறியை மேற்கொள்வதற்குப் பின்வரும் தகைமைகள் கொண்ட ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

1.1. கல்விச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் அல்லது மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் கையொப்பத்துடன் முறையான நியமனத்தைப் பெற்று அரசாங்கப் பாடசாலைகளில் பணியாற்றும் பயிற்றப்படாத ஆசிரியர்கள்,

1.2. கல்வியமைச்சின் தனியார் பாடசாலைகளின் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்ட தனியார் பாடசாலைகளின் பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள மற்றும் மாகாணக் கல்விப்பணிப்பாளர் அனுமதியளித்துள்ள நியமனங்களைக் கொண்டுள்ள ஆசிரியர்கள்,

1.3. கல்வியமைச்சின் பிரிவெனா கல்விப்பிரிவில் பதிவுசெய்யப்பட்டு மாகாணக்கல்விப் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட தியமனங்களைக் கொண்ட பிரிவெனா ஆசிரியர்கள்,

1.4. மகரகமை தேசிய கல்வி நிறுவகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட தொலைக்கல்வி அல்லது பிரின்செட் அல்லது பட்டதாரியல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் பாடநெறியில் ஆசிரியர் பயிற்சிநெறியை மேற்கொண்டு சித்திபெறவில்லையென தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர்கள்.

2. **விசேட அறிவுறுத்தல்கள் :**

2.1 தெரிவானது ஆசிரியர் கல்லூரியில் காணப்படும் வெற்றிடத்திற்கேற்ப பாடசாலையில் கடமையேற்றதன் முன்னுரிமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். ஆசிரியர் சேவை பதவி உயர்வின்போது தொழில்சார் தகைமை இல்லாமையால் பாதிப்பேற்படுவது மட்டுமன்றி பாடசாலைக் கல்வியின் தரவிருத்தியை மேம்படுத்துவதற்குத் தடையாகவும் அமையும். இவற்றைக் கருத்திற்கொண்டு பயிற்றப்படாத ஆசிரியர்கள் பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

2.2 இப்பயிற்சிநெறி ஈராண்டுகால உள்ளகப் பயிற்சியாக அமைவதுடன் விடுதிவசதிகள் இல்லாதவிடத்து கல்லூரி அதிபரின் எழுத்துமூல அனுமதியுடன் கல்லூரிக்கு அண்மையில் தங்கியிருப்பதற்கு அனுமதிக்கப்படும்.

2.3 ஒவ்வொரு கல்லூரியிலும் நடத்தப்படும் பயிற்சிநெறிகள் அக்கல்லூரிகளில் காணப்படும் வளங்கள் மற்றும் வசதிகள் என்பவற்றிற்கேற்ப தீர்மானிக்கப்படுவதனால் எப்போதும் கிட்டிய கல்லூரியைப் பெற்றுத்தர முடியாதிருக்கும்.

2.4 ஆசிரியர் கல்லூரியின் பயிற்சிக்காலப்பகுதியில் வேறு பாடநெறிகளைப் பின்பற்றுவதோ வேறு வெளிவாரிப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதோ கூடாது. அது தொடர்பாகக் கிடைக்கப்பெறும் தகவல்கள் மற்றும் பாடநெறியை விட்டுச்செல்லல் தொடர்பில் முறையான விசாரணையின் பின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2.5 பின்வரும் ஆசிரிய வகையினருக்கு இப்பாடநெறி பொருந்தாது :

(அ) ஏதாவதொரு ஆசிரிய கல்லூரியொன்றில் பயிற்சியைப் பெற்றுக்கொண்டிருக்கும் அல்லது பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்கள் ;

(ஆ) பட்டதாரி நியமனம் அல்லது பட்டதாரிப் பயிலுநர் நியமனம் அல்லது பட்டதாரி முகாமைத்துவ உதவியாளர் நியமனம் அல்லது அதற்குச் சமமான ஏதாவதொரு பட்டதாரி நியமனம் பெற்றுள்ளவர்கள்,

(இ) இதன் 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றிராத ஆசிரியர்கள்,

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாதவர்கள் பாடநெறிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறியவரக்கூடிய எச்சந்தர்ப்பத்திலும், பயிலும் காலத்திலாயின் பயிற்சி இரத்துச் செய்யப்படுவதோடு பயிற்சியின் பின்பாயின் அவரின் சான்றிதழ் செல்லுபடியற்றதாக்கப்படும்.

2.6 ஒவ்வொரு விண்ணப்பதாரியும் கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களை பயிற்சிக்காக பதிவு செய்வதற்கு அழைக்கப்படும் தினத்தன்று ஒப்படைக்க வேண்டும் :

(அ) பூரணப்படுத்தப்பட்ட பிணைமுறி ;

(ஆ) ஆசிரிய கல்விப் பாடநெறியைப் பூர்த்திசெய்த பின் நியமனம் வழங்கப்படும் பாடசாலைகளில் (அரசாங்க ஆசிரியர்கள் அரசாங்கப் பாடசாலைகளுக்கும் அரசாங்க சேவையில் இல்லாத ஆசிரியர்கள் உரிய நிருவாகக் குழுவின் கீழும்) தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் சேவை செய்வதாக அரசுடன் அல்லது நிர்வாகக் குழுவுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தப் பத்திரத்தின் பிரதி ;

2.7 1982 ஆம் ஆண்டின் ஏப்பிரல் மாதத்தின் பின்பு மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் நியமனம் பெற்று பயிற்சிக்காகச் சேரும் ஆசிரியர்கள் பயிற்சியின் பின்பும் முதல் நியமனம் பெற்ற அம்மாவட்டங்களிலேயே கடமையாற்றுவதற்குக் கேட்டுக் கொள்ளப்படுவர்.

2.8 ஆசிரிய கல்லூரிக்கு அனுமதிக்கப்பட்ட பின் ஒரு பயிற்சி ஆசிரியர் தனது விருப்பத்தின் பேரில் பயிற்சியினை இடைநிறுத்த அனுமதி வழங்கப்படமாட்டாது. அவ்வாறு விலகினால் பயிற்சிக்கால அரச செலவினங்களை மதிப்பிட்டு மேலதிக கட்டணத்துடன் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.

3. (i) ஆசிரிய கல்லூரி அதிபரினால் எதிர்பார்க்கப்படும் மட்டத்திற்கு வரவு மற்றும் கற்றலில் ஊக்கம் காட்டாத, பயிற்சிக் காலத்தில் கல்லூரிகளின் ஒழுக்காற்று ஒழுங்கு முறைகளை அனுசரித்து நடக்கத்தவறும் பயிற்சியாளர்கள் பயிற்சியிலிருந்து நிறுத்தப்படுவர். பயிற்சி பெறும் ஒரு ஆசிரியரின் பாடங்களுக்கான பங்களிப்பு, வரவு என்பன 80%திற்குக் குறைவாயின் அவர் ஆசிரிய கல்லூரி இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. எனினும் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் விசேட காரணங்களைக் கருத்திற்கொள்ள வேண்டியிருப்பின் இது தொடர்பாக கல்விச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ii) விடுமுறை.- நிறுவனப் பயிற்சிக்காக ஈராண்டு முழுச்சம்பளத்துடனான கற்கை விடுமுறை வழங்கப்படும். இக்கற்கை விடுமுறைக் காலத்தை முழுமையாகப் பயிற்சிக்காகப் பயன்படுத்த வேண்டும். எனினும் ஆசிரிய பயிற்சி பெறுபவருக்கு அவசியமென அதிபர் திருப்தியடையக்கூடிய பட்சத்தில் மாத்திரம் குறிப்பிட்ட நாட்கள் அமைய விடுமுறை வழங்கப்படலாம். அதற்காக அதிபரின் முன்னனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதை கருத்திற்கொள்ளவும். இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் விடுமுறை ஆண்டுக்கு பத்து (10) நாட்களுக்குக் கூடாதிருக்க வேண்டும்.

அதிக விடுமுறைகளைப் பெற்றுக்கொள்வதன் காரணமாக, பாடநெறியைப் பின்பற்றுவதில் முன்னேற்றம் திருப்தியற்றதாக யாராவது ஒரு பயிற்சியாளர் பற்றி அதிபர் அறிக்கை சமர்ப்பிப்பின் பயிற்சியை இடைநிறுத்தி மீண்டும் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவர். வைத்திய விடுமுறைகளுக்கு அரசாங்க அனுமதிபெற்ற வைத்தியரின் வைத்தியச் சான்றிதழ் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. ஆசிரிய கல்லூரியினால் நடாத்தப்படும் உள்ளகப் பரீட்சைகள் மற்றும் ஈராண்டு கால ஆசிரிய பயிற்சி நெறியை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியதன் பின்னர் பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப் படும் இறுதிப்பரீட்சையில் சித்தி பெறுவோருக்கு ஆசிரியப் பயிற்சிச் சான்றிதழ் வழங்கப்படும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- ஆசிரியர் சேவைப் பிரமாணத்துக்கு அமைவாகவும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்கு உட்பட்டதாகவும் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆசிரிய சேவையில் உள்வாங்கப்பட்டு ஏற்புடைய சம்பள அளவுத்திட்டம் நிர்ணயிக்கப்படும்.

6. (i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமன வகைக்கேற்பவே ஆசிரிய பயிற்சியைப் பெறவேண்டும். ஏனைய பாடத்தில் நியமனம் பெற்றவர்கள் விசேட கல்வி பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும். அரசாங்க ஆசிரியர்களாக நியமனம் பெற்று அவர்களின் நியமனக் கடிதத்தில் நியமனத்தின் வகை குறிப்பிடப்படாதவர்களைப் பொறுத்தவரை க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் தொடர்புடைய பாடத்தில் அவர்கள் சித்தி பெற்றிருப்பதுடன் குறித்த பாடத்தைக் கற்பிக்கின்றார்களாயின் அவர்கள் விண்ணப்பிக்க முடியும். குறித்த பாடத்தை கற்பிப்பதாக நிறுவனத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

க. பொ. த. (சாதாரண தர) தகைமையின் அடிப்படையில் நியமிக்கப்பட்டு அவர்களின் நியமனக் கடிதத்தில் நியமனத்தின் வகை குறிப்பிடப்பட்டிராத ஆசிரியர்களைப் பொறுத்தவரை அவர்கள் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களாகவே கருதப்படுவர்.

நியமனக் கடிதத்தில் நியமனத்தின் வகை குறிப்பிடப்பட்டிராத தனியார், பிரிவெனா ஆசிரியர்களைப் பொறுத்தவரை அவர்கள் கற்பித்த பாடங்களின் அடிப்படையில் பயிற்சிக்காக தெரிவு செய்யப்படுவர். இவ்வகையினர் நிறுவனத் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட நேரசூசியின் பிரதி ஒன்றைச் சமர்ப்பித்தல் அவசியமாகும்.

(ii) ஏதாவதொரு பாடநெறியொன்றிற்குப் போதிய விண்ணப்ப தாரிகள் தொகை இல்லாதிருப்பின் அப்பாடநெறியை நடாத்துவது அல்லது நடாத்தாதிருப்பது பற்றி கல்வி அமைச்சின் செயலாளர் தீர்மானிப்பார்.

| | பாடநெறி எண் | பாடநெறியின் பெயர் |
|---|---|---|
| (i) | 01 | சிங்களம் |
| (ii) | 02 | ஆரம்பக் கல்வி |
| (iii) | 03 | சமூகவியல் |
| (iv) | 04 | விஞ்ஞானம் |
| (v) | 05 | கணிதம் |
| (vi) | 06 | விவசாயம் |
| (vii) | 07 | மனையியல் |
| (viii) | 08 | ஆங்கிலம் |
| (ix) | 09 | புத்த சமயம் |
| (x) | 10 | கிறிஸ்தவம் / ரோமன் கத்தோலிக்க சமயம் |
| (xi) | 11 | இந்து சமயம் |
| (xii) | 12 | இஸ்லாம் |
| (xiii) | 13 | சித்திரம் |
| (xiv) | 14 | சங்கீதம் |
| (xv) | 15 | நடனம் |
| (xvi) | 16 | அரபு |
| (xvii) | 17 | விசேட கல்வி |
| (xviii) | 18 | கைப்பணியும், தொழில் நுட்பமும் |
| (xix) | 19 | வணிகம் |
| (xx) | 20 | தமிழ் |
| (xxi) | 21 | உடற்கல்வி |
| (xxii) | 22 | இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) |

7. (i) **தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :-

(i) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருக்க வேண்டும்.

(ii) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(iii) இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவையில் கணிதம். தாய்மொழி உட்பட 06 பாடங்களில் க. பொ. த. (சா.த) அல்லது தே. பொ. க. த. பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

(iv) அரசாங்கப் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்கள் 2013.07.05 ஆந் திகதிக்கு குறைந்தபட்சம் மூன்று மாத காலம் ஆசிரியராக தமது சேவையைப் பூர்த்தி செய்திருக்கவேண்டும்.

(v) சகல விண்ணப்பதாரரும் தமது நியமனத்தின் தன்மையை முதல் நியமனக் கடித மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

(ii) கீழ்க் குறிப்பிடப்படும் பாடநெறிகளைத் தெரிவு செய்பவர்கள் மேற்சொல்லப்பட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளையும் பெற்றிருக்க வேண்டும் :-

(அ) சிங்கள மொழிப் பயிற்சி நெறி.– க. பொ. த. (உ.த) பரீட்சையில் சிங்கள மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

(ஆ) விஞ்ஞானப் பாடநெறி :

(i) பழைய பாடத்திட்டத்தின் பௌதீகவியல், தாவரவியல், உயிரியல், விலங்கியல், இரசாயனவியல், கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டிற்காவது க. பொ. த. (சா.த.) இல் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருத்தல். (உயிரியல், விலங்கியலோடு அல்லது தாவரவியலோடு கணிக்கப்படமாட்டாது.) அல்லது

(ii) புதிய பாடத்திட்டத்தின் க. பொ. த (சா.த) பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் பாடங்களில் சித்தி பெற்றிருத்தலும், விஞ்ஞானத்தில் சிறப்புச் சித்தி பெற்றிருத்தலும்: அல்லது

(iii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் இரண்டில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

(இ) கணிதப் பாடநெறி :

(i) பழைய பாடத்திட்டத்தின் பௌதீகவியல், பிரயோக கணிதம், தூய கணிதம், கணிதம், விஞ்ஞானம் ஆசிய பாடங்களில் குறைந்தபட்சம் இரண்டிலாவது க. பொ. த. (சா.த.) இல் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் இரண்டு திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் ; அல்லது

(ii) புதிய பாடத்திட்டத்தின் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் கணிதம்,விஞ்ஞானம் சித்தி பெற்றிருத்தலோடு, கணித பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(iii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுள் இரண்டு பாடங்களில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

(ஈ) விவசாயப் பாடநெறி :

(i) பழைய பாடத்திட்டத்தின் க. பொ. த. (சா.த.) இல் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் விவசாயம், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் ஆசிய பாடங்களில் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(ii) புதிய பாடத்திட்டத்தில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் சித்தியடைந் திருத்தல். அத்துடன் விவசாய விஞ்ஞானத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(iii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் விவசாயம், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்றில் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(iv) தே. க. பொ. சா. பரீட்சையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பாடத்திற்கு"ஏ" அல்லது "பீ"தேர்ச்சி பெற்றி ருத்தல். (தொழில் முன்னிலைப் பாடமொன்றெனில் என்ன பாடமென்று அதிபரினால் உறுதிப்படுத் தப்பட்ட ஒரு கடிதம் அவசியமாகும்.) ; அல்லது

(v) அரசாங்க விவசாய பண்ணையொன்றில் 06 மாத காலங்களுக்குக் குறையாத பயிற்சியைப் பெற்றிருத்தல்.

(உ) மனையியற் பாடநெறி :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் மனையியல், தையல் வேலை ஆகிய பாடங்களில் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மனையியல் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(iii) தே. க. பொ. சா. பரீட்சையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பாடத்திற்கு "ஏ" அல்லது "பீ" சித்தி பெற்றிருத்தல். (தொழில் முன்னிலைப் பாடமொன்றெனில் என்ன பாடமென்று அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு கடிதம் அவசியமாகும்.) ; அல்லது

(iv) அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் ஓர் ஆண்டிற்குக் குறையாத மனையியற் பயிற்சியைப் பெற்றதற்கான சான்றிதழ்.

(ஊ) ஆங்கிலப் பாடநெறி :

(i) தற்போது ஆங்கில உதவி ஆசிரியர் நியமனம் பெற்றிருத்தல் ; அல்லது

(ii) ஆங்கிலம் i, ii,iii ஆந் தர ஆசிரிய தராதரப்பத்திரம் பெற்று தற்போது சேவையில் இருப்பதுடன்.

(iii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில்/இலண்டன் சாதாரண தரப்பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(iv) அதனைவிட உயர் பரீட்சை ஒன்றில் ஆங்கிலப் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்.

(எ) *சமய பாடநெறி :*

I. புத்த சமயம், ரோமன் கத்தோலிக்க சமயம், இந்து சமயம், இஸ்லாம் சமயம் ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் தாம் தொடர்வதற்கு எதிர்பார்க்கும் சமய பாடத்தில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

II. தே. க. பொ. சா. பரீட்சையில் சமய பாடத்தில் "ஏ" அல்லது "பீ" தரச் சித்தி பெற்றிருத்தல் ;அல்லது

III. மேலே (1) இல் குறிப்பிட்ட பாடத்தில் அல்லது அதனுடன் தொடர்புடைய பாடமொன்றில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் ;

(ஏ) *சித்திரப் பாடநெறி :*

(i) அரச கவின் கலை நிறுவனத்தின் சான்றுப் பத்திரம் (சித்திரம் பற்றிய மூன்று வருட பயிற்சிநெறி) ; அல்லது

(ii) சித்திரக்கலை ஆசிரிய தராதரப் பத்திரம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்);அல்லது

(iii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்திரப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(iv) தே. க. பொ. சா. பரீட்சையில் சித்திரப் பாடத்தில் "ஏ" அல்லது "பீ" தரச் சித்தி பெற்றிருத்தல். (அழகியற் கலைப் பாடம் எது என்பதை அதிபர் கடித மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.) ; அல்லது

(v) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்திரப் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்;

(ஐ) *சங்கீதப் பாடநெறி :*

(i) இலங்கைக் 'காந்தர்வ' சபையின் சங்கீதம் பற்றிய இறுதி / மத்திம சான்றுப்பத்திரம் அல்லது கீழைத்தேய சங்கீதப் பரீட்சையில் அல்லது தேசிய சங்கீதப் பரீட்சையில் அல்லது தேசிய சங்கீதப் பரீட்சையின் ஆரம்பப் பரீட்சை ; அல்லது

(ii) அரசாங்க சங்கீதக் கல்லூரியின் இடைநிலைச் சான்றுப்பத்திரம் ; அல்லது

(iii) வட இலங்கை கீழைத்தேய சங்கீத ஆசிரிய சங்கத்தின் சங்கீத சான்றிதழ் (5 ஆம் வகுப்பு) ; அல்லது

(iv) அங்கீகரிக்கப்பட்ட இந்திய சங்கீத நிறுவனமொன்றில் சங்கீதம் பற்றிய இடைமாணித தராதரப் பத்திரம் ; அல்லது

(v) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர பரீட்சையில் சங்கீத பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(vi) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சங்கீத பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(vii) தே. க. பொ. சா. பரீட்சையில் சங்கீத பாடத்தில் "ஏ" அல்லது "பீ" தரச் சித்தி பெற்றிருத்தல் (அழகியற் கல்விப் பாடம் எது என்பதை அதிபர் கடித மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)

(ஒ) *நடனப் பாடநெறி :*

(i) இலங்கைக் காந்தர்வ சபையின் நடனம் பற்றிய இறுதி / மத்திம சான்றுப்பத்திரம் அல்லது கீழைத்தேய நடனப் பரீட்சையில் அல்லது தேசிய நடனப் பரீட்சையின் முதலாம் பரீட்சையில் ; அல்லது

(ii) அரசாங்க நடனக் கல்லூரியின் இடைநிலைச் சான்றுப்பத்திரம் ; அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட இந்திய நடன நிறுவனமொன்றில் நடனம் பற்றிய இடைமாணித் தராதரப்பத்திரம் ; அல்லது

(iv) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் நடன பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(v) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் நடன பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(vi) தே. க. பொ. சா. பரீட்சையில் நடன பாடத்தில் "ஏ" அல்லது "பீ" தரச் சித்தி பெற்றிருத்தல் (அழகியற் கல்விப் பாடம் எது என்பதை அதிபரினால் உறுதிப் படுத்தப்பட்ட கடிதம் அவசியம்.)

(ஓ) *அரபுப் பாடநெறி :*

(i) பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் அல்-ஆலிம் ஆரம்பப் பரீட்சையின் i ஆம் ii ஆம் பரீட்சைகளில் தேர்ச்சி பெற்றிருத்தல் அல்லது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அரபுப் பாடத்தில் சித்திபெற்றிருத்தல் : அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட 'மத்ரஸா' நிறுவனமொன்றின் இறுதிப் பரீடசையில் சித்தி பெற்றிருத்தல்.

இதற்கான அங்கீகரிக்கப்பட்ட மத்ரஸாக்கள் வருமாறு.

(1) புஹ்ஜதுல் இப்ராஹீமிய்யா அரபுக் கல்லூரி, கோட்டை,காலி
(2) கபூரிய்யா அரபுக் கல்லூரி, மகரகம
(3) மத்ரஸதுல் பாரி அரபுக் கல்லூரி, வெலிகம
(4) காசிமிய்யா அரபுக் கல்லூரி, புத்தளம்

(5) நத்வத்துல் உலமா அரபுக் கல்லூரி, மூதூர்
(6) கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி, அட்டாளைச் சேனை
(7) மத்ரஸதுல் பலாஹ் அரபுக் கல்லூரி, காத்தான் குடி
(8) முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி, கல்-எலிய
(9) மத்ரஸதுல் ஜிப்ரிய்யா அரபுக் கல்லூரி, காலி
(10) ஹியாதியா அரபுக் கல்லூரி, மாதம்பை
(11) நத்வத்துல் புஹாரி அரபுக் கல்லூரி, கிண்ணியா
(12) மத்ரஸதுல்நூராணியா அரபுக் கல்லூரி, கொட்டுவகொட, மாத்தறை
(13) மக்கியா அரபுக் கல்லூரி,காலி

அல்லது

வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவகம் (நேர்முகப் பரீட்சையின் போது அந்த நிறுவனம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென்று சான்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

(iii) மேலே (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருப்போர் வேறு நியமனம் பெற்றிருப்பினும் அரபுப்பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

(ஔ) *விசேட கல்விப் பாடநெறி :*

இப்பயிற்சி நெறி மூன்று பிரிவுகளைக் கொண்டது.

1. கட்புலன் குறைந்த (பார்வை) பிள்ளைகளுக்குக் கற்பித்தல்
2. செவிப்புலன்குறைந்த (கேள்வி) பிள்ளைகளுக்குக் கற்பித்தல்
3. உளவாற்றல் குறைந்த (நுண்ணறிவு குறைவு) பிள்ளைகளுக்குக் கற்பித்தல்

தாம் விரும்பிய பிரிவு எது என்பதை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். தெரிவின்போது ஆங்கிலத்தில் தேர்ச்சி உள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(க) *கைப்பணி தொழில்நுட்பத்திறன் பயிற்சி நெறி :*

(i) க. பொ. த. (சா.த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் ; கைப்பணி

- மரவேலை
- உலோக வேலை
- நெசவு
- மட்பாண்டம்
- மோட்டார் தொழில்நுட்பம்
- வானொலி தொழில்நுட்பம்
- மேசன் வேலை

ஆகிய பாடங்களில் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(ii) தே. க. பொ. சா. சான்றிதழ் பரீட்சையில் குறிப்பிட்ட பாடத்தில் "ஏ" அல்லது "பீ" தரச் சித்தி பெற்றிருத்தல் (தொழில் முன்னிலைப் பாடம் எது என்பதை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் அவசியம்.) ; அல்லது

(iii) அரச தொழில்நுட்பப் பாடசாலையொன்றில் அல்லது அரச திணைக்களமொன்றின் கீழ் நடத்தப்படும் ஒரு வருடத்துக்குக் குறையாத பயிற்சி நெறியொன்றை திருப்திகரமாகப் பூர்த்தி செய்து பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

(கா) *வர்த்தகப் பாடநெறி :*

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் பொருளியல், வர்த்தகம், கணக்கியல், தட்டச்சு, சுருக்கெழுத்து, வர்த்தகமும் நிதியும் ஆகியவைகளில் இரண்டு பாடங்களில் திறமைச்சித்திகள் பெற்றிருத்தல், அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மேற்குறித்த பாடங்கள் இரண்டில் சித்தியடைந்திருத்தல், அல்லது

(iii) அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் ஒரு வருட வர்த்தகப் பாடநெறியில் சித்தியடைந்து சான்றிதழ் பெற்றிருத்தல்

(கி) *தமிழ் மொழிப் பாட நெறி :*

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

(கீ) *உடற் கல்விப் பாடநெறி :*

(i) தற்போது உடற் கல்விப் பாட ஆசிரியராக நியமனம் பெற்றிருத்தல்

(கு) *சமூகவியல் பாடநெறி :*

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சமூகக்கல்வி பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல், அல்லது

(ii) தே. க. பொ. சா. பரீட்சையில் சமூகக்கல்வி பாடத்தில் "ஏ" அல்லது "பீ" தரத்தில் சித்தி பெற்றிருத்தல், அல்லது

(iii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் புவியியல், வரலாறு, பொருளியல், அரசியல் ஆகிய பாடங்களில் ஆகக்குறைந்தபட்சம் இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்

(கூ) *இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) :*

பந்தி 7 (1) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெற்ற இரண்டாம் மொழி (சிங்களம் / தமிழ்) பாடநெறிக்கு நியமனம் பெற்ற ஆசிரியர்கள் இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

8. அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலையொன்றில் அனுமதிக்கப்பட்ட ஆசிரிய குழுவொன்றில் நிரந்தர ஆசிரியராகக் கடமையாற்றும் சாதாரண வகுப்புகளில் வாரத்தில் 20 மணித்தியாலங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களிடமிருந்து குறிப்பிட்ட ஒரு தொகையினர் பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இது தொடர்பாகக் கீழ்க் குறிப்பிடப்படும் பாடசாலைகள் தனியார் பாடசாலைகளாகக் கொள்ளப்படும்.

(i) 1951 ஆம் வருடம் கட்டணம் அறவிடும் பாடசாலைகளாக மதிக்கப்பட்ட உதவிபெறும் பாடசாலைகள்.

(ii) 1960/12/01 ஆந் திகதி கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலைகளென தீர்மானிக்கப்பட்ட பாடசாலைகள்.

(iii) கல்வி அமைச்சினால் (பிரதேச / மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் அல்ல) அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளும் பிரிவேனாக்களும்.

சகல தனியார் பாடசாலைகளிலும் கடமையாற்றும் விண்ணப்ப தாரிகள் 2013.07.05 ஆந் திகதியன்று குறைந்த பட்சம் ஒருவருட காலம் இடைவிடாது சேவையாற்றியிருத்தல் வேண்டும். அவர்களது முதல் நியமனக் கடிதமும், குறிப்பிட்ட ஆசிரியர் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் குழுவில் உள்ளவர் என்பதையும் அத்தாட்சிப்படுத்திய ஒரு கடிதமும் உரிய மாகாண / வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெற்று நேர்முகப் பரீடசையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

பிரிவெனாக்களிலிருந்து விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் 2013.07.05 ஆந் திகதியன்று ஆகக் குறைந்தது இரண்டு வருடச் சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். 1959 பிரிவெனாச் சட்டம் அல்லது 1979 ஆம் வருட 64 ஆம் இலக்க சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப் பட்ட சேவை இதற்காகக் கணக்கிடப்படும்.

தற்போது பிரிவெனாக்களில் கற்பிக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்கள் சிங்களம், விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், பௌத்த சமயம் ஆகிய பாடநெறிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்கலாம். (நியமனம் பெற்ற பாடத்திற்கே பயிற்சி பெறல் வேண்டும்). ‘வித்யாயதன’ பிரிவெனாக்களில் கற்பிக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்கள் இதற்கு மேலதிகமாக சங்கீதம், சித்திரம், நடனம், வர்த்தகம், உடற்கல்வி, விவசாயம் ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

சகல அரச அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலை ஆசிரியர்கள் முகாமையாளர்களிடமிருந்தும், பிரிவெனா ஆசிரியர்கள் நிருவாகி களிடமிருந்தும் பின்வரும் விடயங்கள் தொடர்பாகப் பெற்றுக்கொண்ட சான்றிதழை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) பயிற்சிபெறும் காலத்தில் சேவையிலிருந்து ஆசிரியரை விடுவிக்க முடியும் என்பது பற்றியும்,

(ii) பயிற்சிக் காலத்தின் போது ஆசிரியருக்குச் சம்பளம் வழங்க முடியும் என்பது பற்றியும்,

(iii) பயிற்சி முடிவில் ஆசிரிய நிருவாக சபையினால் குறிப்பிட்ட ஆசிரியரை மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ள முடியும் என்பது பற்றியும்,

(iv) பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்படும் பிரிவெனா ஆசிரியரிகளுக்குப் பதிலாக வேறு ஆசிரியர்கள் கோரப்படுவதில்லை என்பது பற்றியும் அவரது வேலைகளை அனுமதிக்கப்பட்ட ஆசிரிய குழுவினருக்கிடையில் பகிர்ந்து கொடுப்பதாகவும் குறிப்பிடுதல்.

அரச அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் இருந்தும், பிரிவெனாக்களிலிருந்தும் தெரிவு செய்யப்படும் ஆசிரியர்கள் பயிற்சிக்காகப் பதிவு செய்யப்படுவதற்கு முன்பு "பயிற்சியின் பின்பு அரசாங்க பாடசாலைகளில் தொழில் கோருவதில்லை"என்ற நிபந்தனைப் பத்திரத்தில் ஒப்பமிட வேண்டும்.

அரச அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளிலிருந்து தோற்றும் சகல ஆசிரியர்களும் மாகாணக் கல்விப் பணிப்பாளரால் கையொப்பமிடப்பட்ட முதல் நியமனக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். 18 வயதுக்கு முன் நியமனம் பெற்ற ஆசிரியர்களின் நியமனத் திகதி அவர்களுக்கு 18 வருடம் பூர்த்தியான தினத்திலிருந்தே கணிக்கப்படும். இந்நியமனக் கடிதம் வேறொரு அதிகாரியினால் கையொட்டமிடப்பட்டிருப்பின் அது உரிய மாகாணக் கல்விப் பணிப்பாளரால் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

9. தெரிவுக்காக விண்ணப்பித்தல்

(i) இந்த வர்த்தமானி அறிக்கையில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய விண்ணப்பதாரியால் தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து அதன் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

(அ) பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்கு எதிர்பார்க்கும் மொழியிலேயே விண்ணப்பித்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பம் 8" X 12" (A4) அளவிலான தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்படல் வேண்டும்.

(இ) எந்தக் கூட்டினையும் மாற்றவோ நீக்கவோ முயற்சிக்கக் கூடாது. கோடுகளுக்கிடையில் இடைவெளி இருத்தல் வேண்டும். ஒன்றோடொன்று இணைந்திருக்கும் விதத்தில் தயாரித்தல் கூடாது.

(ii) விண்ணப்பதாரரால் விண்ணப்பப்படிவம் குறைவின்றியும் சரியாகவும் பூர்த்தி செய்யப்படவேண்டும். பூரணமற்ற விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கீழ்க் குறிப்பிடப்படும் அம்சங்களின்பால் விண்ணப்பதாரிகளின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(அ) சகல விண்ணப்பதாரிகளும் தமது பெயரைத் திணைக் களத்தில் பதிவு செய்துள்ள பிரகாரமே குறிப்பிடுதல் வேண்டும்.

(ஆ) தமது பாடசாலை அதிபரூடாக விண்ணப்பித்தல் வேண்டும். பாடசாலை அதிபர் ஒருவர் விண்ணப்பிப்பதாயிருந்தால் கோட்ட/வலயக் கல்விக் காரியாலய கல்விப் பணிப்பாளர் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

(இ) வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைவாக தயாரிக்கப் பட்ட விண்ணப்பங்களை கீழ்வரும் மாதிரிக்கேற்ப தயாரிக்கப்பட்ட கடிதவுறைகளில் இட்டு அதன் இடது மேல் மூலையில் "ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறிக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்தல்-2013/2014" எனக் குறிப்பிட்டு பயிற்சி நெறி, மொழி மூலம் மாவட்டம் என்பனவற்றையும் குறிப்பிட்டு 2013.08.05 திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் "கல்வி பணிப்பாளர், ஆசிரியர் கல்வி நிர்வாக கிளை, கல்வி அமைச்சு, ‘இசுருபாய’, பத்தரமுல்லை" எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

பதிவஞ்சல்

"ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர்
கல்விப் பாடநெறியைப் பின்பற்றுவதற்காக
ஆசிரியர்களைத் தெரிவு செய்தல் - 2013/2014"

பாடநெறி : ..............
மொழிமூலம் : ..............
பாடசாலையின் வலயம் : ..............

கல்வி பணிப்பாளர்,
ஆசிரியர் கல்வி நிர்வாக கிளை,
கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை.

(ஈ) தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அத்துடன்,

(i) விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

(ii) விண்ணப்பத்தோடு ஆவணங்கள் எவற்றையும் இணைத்து அனுப்புதல் கூடாது.

(iii) தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நடைபெறும் நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளும், போட்டோ பிரதிகளும் சமர்ப்பிப்பதற்குத் தயாராக இருத்தல் வேண்டும். போட்டோப் பிரதிகள் யாவும் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும்.

(உ) "ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப்பாடநெறிக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்தல்-2013/2014" இப்பயிற்சி நெறி தொலைக்கல்வி மூலமோ வார இறுதி பயிற்சி மூலமோ நடைபெற மாட்டாது.

10. வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம் மற்றும் தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலமான வெளிப்படுத்தல்களில் ஏதாவது தொடர்பின்மை தெரியவரும் பட்சத்தில் சிங்கள மொழி வெளிப்படுத்துகையே அதிகாரபூர்வமானதாயிருக்கும்.

எச். எம். கோடாபய ஜயரத்ன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை,
2013.07.05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

*ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரிய கல்விப் பாடநெறியைத் தொடர்வதற்காக ஆசிரியர்களைத் தெரிவு செய்தல் - 2013/2014*

1. மொழி மூலம் : [ ]

2. முதல் நியமனக் கடிதத்திற்கமைவாக பாடசாலையில் கடமையேற்ற திகதி : [ ]

3. பாடநெறி : [ ]

4. முதல் நியமனத்தின் தன்மை, பாடம் அத்துடன் உங்களுக்கு உரித்தான சேவை/தரம்

(அ) முதல் நியமனத்தின் தன்மை : [ ]

(ஆ) பாடம் : [ ]

(இ) உரித்தான சேவை :

இலங்கை ஆசிரியர் சேவை - 01
ஆசிரிய உதவியாளர் - 02
வேறு (குறிப்பிடவும்) - 03
(உரிய இலக்கத்தை எதிரே உள்ள கூட்டில் குறிப்பிடவும்) : [ ] [ ]

(ஈ) தரம் : [ ]

5. நீங்கள் தொலைக்கல்வி அல்லது வார இறுதி ஆசிரியர் பயிற்சி பாடநெறியில் பயிற்சி பெற்றும் அதனைப் பூர்த்தி செய்யவில்லையாயின் மட்டும் பின்வரும் விபரங்களைச் சமர்ப்பிக்கவும்;

(i) பாடநெறி :....................................................................
(ii) வருடம் :..................................................................
(iii) இறுதிப் பரீட்சையின் பெறுபேறு :................................ ..................................

6. பெயர் முதலெழுத்துக்களுடன் (ஆங்கில பெரிய எழுத்தில், கடைசிப் பெயர் முன்பாகவும் முதலெழுத்து கடைசியாகவும் எழுதவும் உ-ம் : PERERA, A. B.) : வண./திரு./திருமதி./செல்வி. …...............................................................................................

7. உபயோகிக்கும் முறைப்படி முதலெழுத்துக்குரிய பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : வண./திரு./திருமதி/செல்வி ........................... ..........................................................................................

8. பால் : [ ]
ஆண் - 1, பெண் - 2
(பொருத்தமான இலக்கத்தை எதிரிலுள்ள சதுரத்தில் எழுதுக.)

9. தேசிய அடையாள அட்டை இலக்கம் : [ ]

10. பிறந்த திகதி (2013.07.05 ஆந் திகதியன்று வயது)
வருடங்கள் :............... மாதங்கள் :............... நாட்கள் :...............

11. தொலைபேசி இல :
வதிவிட :.............................. நடமாடும் :..............................

12. மின்-அஞ்சல் (இருப்பின்) :.....................................................

13. பிரத்தியேக முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்)
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

14. தற்போதைய சேவை நிலையம், முகவரி, மாவட்டம் மற்றும் வலயக் கல்விக் காரியாலயம் (ஆங்கில பெரிய எழுத்தில்) :

(i) தற்போதைய சேவை நிலையம் : ......................................
(ii) முகவரி : ........................................................................
(iii) மாவட்டம் : ....................................................................
(iv) வலயக் கல்விக் காரியாலயம் : ......................................
(v) சேவை நிலையத்தின் தன்மை (பொருத்தமான இலக்கத்தை எதிரிலுள்ள சதுரத்தில் எழுதுக.)

(அ) அரசாங்கப் பாடசாலை - 01
(ஆ) பெருந்தோட்ட - 02
(இ) அரசாங்க அனுமதிபெற்ற பிரிவெனா - 03
(ஈ) அரசாங்க அனுமதிபெற்ற பாடசாலை - 04
(உ) வேறு நிலையம் - 05

15. கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சைப் பெறுபேறுகள் :

| | | முதலாம் முறை | இரண்டாம் முறை |
|---|---|---|---|
| | வருடம் | | |
| | சுட்டிலக்கம் | | |
| இலக்கம் | பாடங்கள் | பெற்றுள்ள தரங்கள் | |
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |
| 9. | | | |
| 10. | | | |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேறுகள்

| | | முதலாம் முறை | இரண்டாம் முறை |
|---|---|---|---|
| | வருடம் | | |
| | சுட்டிலக்கம் | | |
| இலக்கம் | பாடங்கள் | பெற்றுள்ள தரங்கள் | |
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

16. சேவை விவரங்கள் :

| இலக்கம் | சேவையாற்றிய பாடசாலை | சேவைக் காலம் | கஷ்ட பிரதேசமா / இல்லையா என்ற, விவரம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

17. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(i) மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் யாவும் உண்மையானதும் பிழையற்றதெனவும் உறுதிமொழிகின்றேன். என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் பிழையெனக் காண்டுபிடிக்கப் படுமிடத்து பயிற்சிநெறிக்குத் தெரிவுசெய்யப்பட மாட்டேன் எனவும், தெரிவுசெய்யப்பட்ட பின், வழங்கப்பட்ட தகவல்கள் பிழையென வெளிப்படும் பட்சத்தில் பாடநெறியிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

(ii) தற்போது எந்தவொரு நிறுவனசார் ஆசிரியர் பயிற்சியிலும் நான் பங்குபற்றுவதில்லை என வெளிப்படுத்துகிறேன்.

................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :................................

18. **அதிபரின் சிபார்சு :**

(i) தற்போது ஆசிரியர் குழுவிலுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை :................................
(ii) மாணவ எண்ணிக்கை :................................
(iii) விண்ணப்பதாரர் பயிற்சிக்காக விடுவிக்கப்படின் மாணவ எண்ணிக்கைப்படி பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை போதுமானதா ? :................................

மேற்படி விண்ணப்பதாரி எனது பாடசாலையில் .................. ............................................... ஆந் திகதி முதல் ஆசிரியராக/ஆசிரிய உதவியாளராக சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பதாரியால் மேலே வழங்கப்பட்ட தகவல்கள் யாவும் சரியானவை எனவும் சான்றுபடுத்து கிறேன்.

ஆசிரிய பயிற்சிக்காக வண./திரு./திருமதி/செல்வி ................. .......................... தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க இணக்கம் தெரிவிக்கின்றேன்.

................................,
அதிபரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி :................................

19. வண./திரு./திருமதி/செல்வி ...................................... ; ...................................................... வலயத்திலுள்ள ........................................ பாடசாலையில் ஆசிரியர் சேவையில்/ஆசிரிய உதவியாளராக சேவையிலுள்ளார் எனவும் ; அவர் ................................................................ ஆந் திகதியிடப்பட்ட முதல் நியமனத்திற்கமைய ...................... ...................................... ஆந் திகதி கடமையேற்றுள்ளார் என்பதையும், ............................ திகதி முதல் இதுவரை இப்பாடசாலையில் சேவையாற்றுகின்றார் எனவும் இவ்விண்ணப் பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னால் பரீட்சிக்கப் பட்டனவென்றும், அவை உண்மையானவை என்றும் சான்றுப் படுத்துகிறேன்.

ஆசிரிய பயிற்சிக்காக வண./திரு./திருமதி./செல்வி .............. தெரிவு செய்யப்பட்டால் அதற்காக விடுவிக்க இணக்கம் தெரிவிக்கிறேன்.

................................,
வலயக் கல்விப் பணிப்பாளரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி :................................

20. வண./திரு./திருமதி./செல்வி ........................................ ........................................................ வலயத்திலுள்ள .................................................... பாடசாலையில் ஆசிரியர் சேவையில்/ஆசிரிய உதவியாளராக சேவையிலுள்ளார் எனவும் இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னால் பரீட்சிக்கப்பட்டனவென்றும், அவை உண்மையானவை என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

ஆசிரிய பயிற்சிக்காக வண./திரு./திருமதி/செல்வி ................. தெரிவு செய்யப்பட்டால் அதற்காக விடுவிக்க இணக்கம் தெரிவிக்கிறேன் ........................

................................,
மாகாணக் கல்விப் பணிப்பாளரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி :................................

6-21/1

---

**கல்வி அமைச்சு**

பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழுநேர பாடநெறியை தொடர்வதற்காக தேர்ந்தெடுத்தல் - 2014 ஆம் கல்வி ஆண்டு

1. 2014 ஆம் கல்வி ஆண்டில் நடைபெறும் ஒரு வருடகால பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி (உள்வாரி) முழுநேர பாடநெறியைத் தொடர்வதற்கு தேர்ந்தெடுப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இப்பாடநெறி கொழும்பு, பேராதனை மற்றும் யாழ் பல்கலைக் கழகங்களில் நடைபெறும்.

3. அவ்வப் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கும் மொழி மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இப்பாடநெறிக்காக ஒரு மொழி மூலம் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

1. கொழும்புப் பல்கலைக்கழகம் - சிங்கள மொழி மற்றும் தமிழ் மொழி மூலம்
2. பேராதனைப் பல்கலைக்கழகம் - சிங்கள மொழி மூலம்
3. யாழ் பல்கலைக்கழகம் - தமிழ்மொழி மூலம்

4. சகல விண்ணப்பதாரர்களும் தாம் கீழ்க் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டவர் என்பதனை உறுதிசெய்ய வேண்டும் :-

(i) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பிரஜையாக இருக்க வேண்டும் ;

(ii) 2013.08.05 ஆந் திகதியன்று 50 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும் ;

(iii) நற்பிரஜையாகவும் சிறந்த தேகாரோக்கியத்துடனும் இருக்கவேண்டும் ;

(iv) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரியாக இருக்கவேண்டும் ;

(v) கீழ்க் குறிப்பிடப்பட்ட சேவைகளுக்குரிய பதவி ஒன்றில் நிரந்தர நியமனம் பெற்றிருக்க வேண்டும் :-

(அ) இலங்கை ஆசிரியர் சேவை ;
இலங்கை தனியார் பாடசாலை ஆசிரியர் சேவை ;
இலங்கை பிரிவென் ஆசிரியர் சேவை ;

(ஆ) இலங்கை அதிபர் சேவை ;

(இ) இலங்கைக் கல்வி நிருவாக சேவை ;

(ஈ) இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை.

(vi) பட்டத்திற்குப் பின்னர் 2013.08.05 ஆந் திகதியன்று இலக்கம் 04(எ) குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளுக்குரிய பதவி ஒன்றில் ஒரு வருடகால சேவைக்காலத்தை பூர்த்திசெய்திருக்க வேண்டும்.

**கவனிக்க வேண்டியவை :**

(1) கற்பித்தலில் தேசிய டிப்ளோமாவுக்கான ஆசிரிய நியமனம் பெற்றவர்கள் 2013.08.05 ஆந் தினத்திற்கு ஒப்பந்த முறியின்படி தமது கட்டாய சேவைக்காலமான ஐந்து வருட சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருப்பின் மாத்திரம் விண்ணப்பிக்கத் தகுதி பெறுவர்.

(2) கற்கை விடுமுறை பெற்று பிணைமுறிக்கு உட்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் 2013.08.05 ஆந் தினத்திற்கு பிணை முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டாய சேவைக் காலத்தை பூர்த்திசெய்து அல்லது அவ்வாறின்றேல் ஐந்து வருடங்கள் (05) பூர்த்திசெய்திருப்பின் மாத்திரம் விண்ணப்பிக்க தகைமை பெறுவர்.

(3) கல்விமானி பட்டதாரிகள் இப்பாடநெறியைத் தொடர்வதற்காக விண்ணப்பிக்க முடியாது.

**5.1 தேர்ந்தெடுக்கும் ஒழுங்குமுறை :**

(i) சகல விண்ணப்பதாரர்களும் எழுத்துமூலப் பரீட்சை ஒன்றுக்கு தோற்றவேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர்கள் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளுக்கமைய நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் பாடநெறிக்காக சேர்த்துக்கொள்ளும் எண்ணிக்கையைப் போன்று மூன்று மடங்கு நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர் ;

(iii) வர்த்தமானி அறிவித்தலில் 4(எ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரி உள்ளடங்கும் சேவைக்கான பதவியின் சேவைக்காலத்திற்காக நேர்முகப் பரீட்சை

யின்போது புள்ளிகள் வழங்கப்படும். சேவைக்காலத்தின் ஒரு வருடத்திற்கு 4 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். சேவைக் காலத்திற்காக வழங்கப்படும் உயர்ந்தபட்சப் புள்ளிகள் 40 ஆகும். விண்ணப்பதாரியின் சேவைக்காலம் கணிப்பீடு செய்யப்படுவது அவர் உரிய பதவியில் கடமையைப் பொறுப் பேற்ற தினம் தொடக்கம் ஆகும் ;

(iv) எழுத்துமூலப் பரீட்சையின் புள்ளிகள் மற்றும் சேவைக் காலத்திற்காகக் கிடைக்கும் புள்ளிகள் ஆகியவற்றின் மொத்தம் இறுதிப் புள்ளிகளாகக் கருதி அப்புள்ளிகளின் தொடருக் கமைய பாடநெறிக்காக தேர்ந்தெடுக்கப்படும் ;

(v) உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் பாடநெறிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் எண்ணிக்கை யில் 1% இவர்களுக்காக ஒதுக்கப்படும் ;

(vi) பாடநெறியைத் தொடர்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் எண்ணிக்கை அவ்வப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் இடவசதிகளுக்கமைய தீர்மானிக்கப்படும்.

5.2 **எழுத்துமூலப் பரீட்சை** :

(i) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் தேர்ந்தெடுப்பதற்கான எழுத்துமூலப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளில் கொழும்பு மற்றும் யாழ் நகரங்களில் நடைபெறும் ;

(ii) மேற்கூறப்பட்ட 02 மத்திய நிலையங்களில் தாம் விரும்பும் மத்திய நிலையத்தில் விருப்பமான மொழிமூலம் எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பிக்கும் பரீட்சை மத்திய நிலையம் பின்னர் மாற்றியமைக்கப்படமாட்டாது ;

(iii) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சட்ட ஒழுங்கு களுக்கு உட்பட்டு பரீட்சார்த்தி செயற்படவேண்டும் ;

(iv) எழுத்துமூலப் பரீட்சை வினாப்பத்திரம் இரண்டு பிரிவுகளாக அமையும் :-

(அ) பொது அறிவு.- சமகாலத் தகவல்கள் பொதுஅறிவு, கல்வித் தகவல்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான வினாப்பத்திரம் (01 மணித்தியாலம்)

(ஆ) பொது உளச்சார்பு.- மொழி அறிவு, விளக்கம், விவாதிக்கும் திறமை, புள்ளிவிபர ரீதியிலான திறமை போன்றவைகளை உள்ளடக்கியதாக இவ்வினாப் பத்திரம் அமையும். (நேரம் 1 1/2 மணித்தியாலம்)

5.3 **நேர்முகப்பரீட்சை** :

(i) நேர்முகப்பரீட்சையின்போது பரீட்சார்த்தியினால் வர்த்தமானி அறிவித்தலின் 4வது வாசகத்திற்கமைய தாம் பாடநெறியைத் தொடரத் தகைமை பெற்றவர் என உறுதிசெய்ய வேண்டும்.

(ii) பரீட்சார்த்தியினால் வர்த்தமானி அறிவித்தலின் 4(எ) இற்குரிய பதவியின் சேவைக்காலத்தை உறுதிசெய்வதற்கு உரிய ஆவணங்களை நேர்முகப்பரீட்சை சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும். விசேடமாக பதவியில் கடமையைப் பொறுப்பேற்ற தினம் நேர்முகப்பரீட்சையின் போது உறுதிசெய்யப்பட வேண்டும். இது பரீட்சார்த்திக்கு சேவைக்காலத்திற்குரிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள உதவியாக அமையும்.

(iii) பிரிவெனாஇ அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளி லிருந்து பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள்:-

(அ) பாடநெறிக்காக விடுவிப்பதாகவும்,

(ஆ) பாடநெறியை தொடரும் காலத்திற்குள் சம்பளம் செலுத்துவதாகவும்,

(இ) பாடநெறியின் இறுதியில் ஆசிரியரை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதாகவும்,

(ஈ) குறித்த ஆசிரியரின் பாடநெறி கால எல்லைக்குள் அவரது வெற்றிடத்திற்கு வேறு ஆசிரியர் ஒருவரை ஆட்சேர்ப்பதில்லை என்றும்,

(உ) ஆசிரியரின் பணிகள் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் களுக்கிடையே பகிர்ந்தளிப்பதாகவும் பதிவாளர் / நிர்வாக சேவை முகாமையாளர்களினால் உறுதிசெய்த அறிக்கைப் படிவத்தை நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

6. **விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கவேண்டிய முறை** :

(i) இவ் வழங்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய A4 அளவு கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப் படிவத்தை தயாரிக்க வேண்டும்.

(ii) கட்புலன் /செவிப்புலனற்ற /ஏனைய விசேட தேவைகள் கொண்ட விண்ணப்பதாரர்களுக்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களின் இடதுபக்க மேல் மூலையில் சிவப்பு நிறத்தினால் "கட்புலனற்ற/செவிப்புலனற்ற/ஏனைய விசேட தேவைகள் கொண்ட விண்ணப்பதாரிகள்" எனக் குறிப்பிட வேண்டும்.

(iii) பரீட்சைக் கட்டணம் செலுத்துதல்.- பரீட்சைக் கட்டணமாக ரூ.750/- பணத்தை அருகாமையில் உள்ள தபால் அலுவல கத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்காக உள்ள கூட்டினுள் கழராதவாறு ஒட்டவும். 2013.07.05 தொடக்கம் 2013.08.05 வரை சகல தபால் அலுவலகங்களிலும் இப்பற்றுச்சீட்டை வழங்குவதற்காக ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பரீட்சைத் திணைக்களத்தினால் தபால் மா அதிபருக்கு அறிவிக்கப்பட் டுள்ளது.

(iv) விண்ணப்பப்படிவத்தை அனுப்புதல் :

(அ) விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) பாடநெறி எனக் குறிப்பிட வேண்டும்.

(ஆ) 2013.08.05 ஆந் தினம் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு சேவை, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும்.

(இ) விண்ணப்பத்தின் பிரதியொன்றை விண்ணப்பதாரியின் சுய விபரக்கோவைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பதாரி பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்படின் கடமை விடுமுறை பெற்றுக்கொள்வதை இலகுபடுத்துவதற்கு இவ்விண்ணப்பம் பயன்படுத்தப் படும்.

(v) நேரசூசி மற்றும் அனுமதி அட்டை பரீட்சார்த்திகளுக்கு தபால்மூலம் அனுப்பிவைக்கப்படுவதுடன் தமது அனுமதி அட்டை பரீட்சை நடைபெறும் தினத்திற்கு குறைந்தபட்சம் 07 நாட்களுக்கு முன்னர் கிடைக்காதபட்சத்தில் ''பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' என்ற முகவரிக்கு அது தொடர்பாக கீழ்க்குறிப் பிடப்பட்ட தகவல்களுடன் அறிவித்தல் வேண்டும் :-

(அ) பரீட்சையின் பெயர் ;

(ஆ) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;

(இ) முகவரி ;

(ஈ) பணம் செலுத்திய தபால் அலுவலகம் மற்றும் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இலக்கம் ;

(உ) விண்ணப்பப்படிவம் தபாலிலிட்ட திகதி ;

(ஊ) விண்ணப்பப்படிவம் தபாலிலிட்ட அலுவலகம் மற்றும் பற்றுச்சீட்டு இலக்கம்.

(vi) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீண்டும் திருப்பிச் செலுத்தவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றியமைக்கப்படவோ மாட்டாது.

(vii) முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

(viii) சகல விண்ணப்பதாரர்களும் எழுத்துமூலப் பரீட்சையின் போது தமது அடையாளத்தை செல்லுபடியாகும் ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

(ix) உரிய பாடநெறியைத் தொடருவதற்கு விண்ணப்பதாரர்கள் ஏதாவதொரு பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டதன் பின்னர் பல்கலைக்கழகத்தை மாற்றியமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

(x) தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னரும் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தேவைப்படும் தகைமைகளைப் பூர்த்திசெய்யவில்லை என தெரியவரும் பட்சத்தில் அவ்வாறான பரீட்சார்த்திகளை தேர்ந்தெடுப்பதிலிருந்து இரத்துச்செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

7. **கற்கை விடுமுறை**.- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு பாடநெறியைத் தொடர்வதற்காக முழுமையான சம்பளத்துடனான கற்கை விடுமுறை வழங்கப்படும். இதற்காக இலங்கைக் கல்வி நிருவாக சேவையின் உத்தியோகத்தர்கள், இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் உத்தியோகத்தர்கள், தேசிய பாடசாலை, தனியார் பாடசாலை, பிரிவெனாக்களில் சேவையாற்றும் பணியாளர்களின் கற்கை விடுமுறையினை கல்வி அமைச்சின் செயலாளரினாலும் ஏனைய விண்ணப்பதாரர்களின் கற்கை விடுமுறை மாகாணக் கல்விச் செயலாளர்களினாலும் அங்கீகரிக்க வேண்டும்.

8. **பிணை முறி**.- பாடநெறிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்ததன் பின் அவர் இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை ஒழுங்குவிதி முறைகளுக்கமைய குறிப்பிட்ட காலத்திற்கு திணைக்களத்தில் சேவையாற்றுவதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் /கல்விச் செயலாளருடன் பிணை முறியில் ஒப்பமிட வேண்டும். .

9. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரி ஏதாவதொரு காரணத்தின் அடிப்படையில் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யாது உரிய காலஎல்லைக்குள் டிப்ளோமாச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் அக்கற்கை விடுமுறைக்காலத்திற்குள் அவருக்கு செலுத்தப்பட்ட முழுமையான சம்பளம் மற்றும் கொடுப்பனவு மீண்டும் திருப்பிச் செலுத்த வேண்டும்.

10. பாடநெறியைத் தொடரும் காலத்தில் மாணவர்களின் செயற்பாடுகள், பழக்கவழக்கங்கள், வரவு திருப்தியளிக்காத பட்சத்தில் அவர்கள் பாடநெறியில் இருந்து நீக்கப்படுவார்கள்.

11. இவ் வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம் மற்றும் தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில் ஏதேனும் வித்தியாசங்கள் இருப்பின் சிங்கள மொழி வசனங்களே செல்லுபடியாகும்.

எஸ். எம். கோட்டபய ஜயரத்ன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
''இசுருபாய'',
பெலவத்தை,
பத்தரமுல்லை.
2013, யூலை 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

பட்டப்பின் கல்வி டிப்ளோமா
(உள்வாரி) முழுநேர பாடநெறிக்காக தேர்ந்தெடுத்தல்-2014 ஆம் கல்வி ஆண்டு)

| |
|---|
| |

(அலுவலகப் பயன்பாட்டிற்காக)

| விண்ணப்பிக்கும் மொழி மூலம் (சிங்களம்/தமிழ்) | விண்ணப்பிக்கும் பரீட்சை மத்திய நிலையம் (கொழும்பு / யாழ்ப்பாணம் / | விண்ணப்பிக்கும் பல்கலைக்கழகம் (கொழும்பு / யாழ்ப்பாணம் / பேராதனை) |
|---|---|---|
| | | 1. |
| | | 2. |

1. (i) முதல் எழுத்துக்களுடன் பெயர் ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில் (முதல் எழுத்துக்கள் முன்னால்) திரு./ திருமதி/ செல்வி :----.
உ-ம் : Mr. SILVA, .A.B.C

(ii) முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :----.

2. (i) (அ) அலுவலக முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) : ----
(ஆ) தொலைபேசி இலக்கம் :----.
(ii) (அ) சொந்த முகவரி (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)
(ஆ) தொலைபேசி இலக்கம் :----.

(iii) சேவையாற்றும் பாடசாலை/நிறுவகத்தின் அமைவிடம் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) :-

| மாகாணம் | மாவட்டம் | வலயம் |
|---|---|---|
| | | |

(iv) நிறுவனத்தின் தன்மை (அரச பாடசாலை/தனியார் பாடசாலை/பிரிவெனா/ஏனையவை) :----.

3. (i) பிறந்த திகதி :
ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

(ii) 2013.08.05 ஆந் தினத்தன்று வயது-

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

(iii) பால்: (ஆண் /பெண்) :----.

4. பட்டம் தொடர்பான விபரம் :-

| பட்டம் | பல்கலைக் கழக பாடநெறியைத் தொடரும் காலம் (தொடக்கம் வரை) | பட்டம் பெற்ற ஆண்டு | பட்டம் செல்லுபடியாகும் தினம் | பட்டத்திற்கான பாடங்கள் | சித்தியின் தரம் | நிறுவகம்/பல்கலைக் கழகம் | பட்டம் (உள்வாரி/ வெளிவாரி) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

5. (i) (அ) இலங்கை ஆசிரியர் சேவைக்கு நியமிக்கப்பட்ட திகதி : ----.
(ஆ) இலங்கை ஆசிரியர் சேவையில் கடமையை பொறுப்பேற்ற திகதி :----.

(இ) தற்போது வகிக்கும் பதவி :----.

(ii) (அ) இலங்கை அதிபர் சேவை /இலங்கை கல்வியியலாளர் சேவை /இலங்கை கல்வி நிருவாக சேவைக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

(ஆ) இலங்கை அதிபர் சேவை /இலங்கை கல்வியியலாளர் சேவை / இலங்கை கல்வி நிருவாக சேவையில் கடமையை பொறுப்பேற்ற திகதி :----.

(iii) பட்டத்திற்கு பின்னர் இலங்கை ஆசிரியர் சேவை /இலங்கை அதிபர் சேவை /இலங்கை கல்வியியலாளர் சேவை /இலங்கை கல்வி நிருவாக சேவையின் பதவியில் 2013.08.05 ஆந் திகதியன்று சேவைக்காலம் :----.

(iv) இலங்கை ஆசிரியர் சேவை / இலங்கை அதிபர் சேவை / இலங்கை கல்வியியலாளர் சேவை /இலங்கை கல்வி நிருவாக சேவையில் மொத்த சேவைக்காலம் :- 2013.08.05 ஆந் திகதி வரை மொத்தமான சேவைக் காலம் :----.

6. தொழிற்பயிற்சி தொடர்பான விபரம் :-

| பாடநெறியைத் தொடர்ந்த நிறுவகம் (ஆசிரிய கலாசாலை/தேசிய கல்விக் கல்லூரி/ ஏனையவை) | பாடநெறி (பாடத்துறை) | நிறுவனத்தில் பாட நெறியைத் தொடர்ந்த கால எல்லை | |
|---|---|---|---|
| | | தினம் தொடக்கம் | தினம் வரை |
| | | | |

7. பெற்றுக்கொண்ட கற்கை விடுமுறை தொடர்பான விபரங்கள் :-

| விடுமுறை பெற்றதற்கான காரணம் | முறிக்காலம் ............... தினம் தொடக்கம் ............... தினம் வரை | முறியை பூரணப் படுத்த எஞ்சியுள்ள காலம் |
|---|---|---|
| | | |

**குறிப்பு**.- தேசிய கல்விக் கல்லூரி ஒன்றில் தேசிய போதனாவியல் டிப்ளோமாப் பாடநெறியைத் தொடரும் காலஎல்லை கற்கை விடுமுறையாகக் கருதப்படமாட்டாது.

8. (அ) விண்ணப்பதாரிக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் உள்ளனவா? அவ்வாறிருப்பின் அது தொடர்பான தகவல்கள்
(ஆ) ஆம், எனின் எதற்காக ......................................................

9.

| | | |
|---|---|---|
| தபால் அலுவலகத்திற்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை இங்கு ஒட்டவும் | | ..................... திகதிய பற்றுச்சீட்டு இலக்கம் ....................... இன் கீழ் ...................... தபால் /உபதபால் அலுவலகத்திற்கு ரூ. ............ (எழுத்தில்) செலுத்தப்பட்டதனை உறுதிசெய்கிறேன்.<br><br>........................<br>விண்ணப்பதாரரின் கையொப்பம். |

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை**.- விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் சரியானதும் உண்மையானதும் என்றும் 2013.07.05 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் 4 ஆவது வாசகத்திற்கமைய எனக்கு இப்பாடநெறியைத் தொடர்வதற்காக தகைமை உள்ளது என்றும் பரீட்சை சட்டக் கோவையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்குவதாகவும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி செல்லுபடியாகும் பற்றுச்சீட்டை இணைத்துள்ளதாகவும் இத்தால் உறுதிமொழிகிறேன்.

................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :................................

11. **பாடநெறிக்காக நிறுவகத்திலிருந்து விடுவிப்பதற்கான பரிந்துரை**

(அதிபர், பீடாதிபதி, பதிவாளர், நிருவாக சபை முகாமையாளர் அல்லது திணைக்களப் பொறுப்பாளர்)

மேற்கூறப்பட்ட பெயர் கொண்ட விண்ணப்பதாரி பாடநெறியைத் தொடர்வதற்காக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் தொழிற்பயிற்சிப் பாடநெறியை தொடரும் தேவையை கருத்திற்கொண்டு இவ்விண்ணப்பதாரியை விடுவிக்கிறேன் /விடுவிக்கவில்லை.

................................,
அதிபரின்/நிறுவனத் தலைவரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி :................................

12. **பாடநெறிக்கு ஆசிரியரை விடுவிப்பது தொடர்பில் வலயக் கல்விப்பணிப்பாளரின் சிபாரிசு**:

மேற்கூறப்பட்ட பெயர் கொண்ட விண்ணப்பதாரி பாடநெறியை தொடர்வதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் அதற்கு கல்வி விடுமுறை வழங்குவதற்கு சிபாரிசு செய்கின்றேன்.

................................,
வலயக் கல்விப் பணிப்பாளரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி :................................

7-21/2

---

## அரசாங்க சேவை ஆணைக்குழு

### சுகாதார சேவைகள் திணைக்களத்தின் இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II தரம் II பூச்சியியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013

சுகாதார சேவைகள் திணைக்களத்தின் இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II தரம் II பூச்சியியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகைமை பெற்றுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 28 ஆகும்.

2. இவ் அறிவித்தலில் ''செயலாளர்'' என்ற சொல், பொது நிர்வாக அமைச்சின் செயலாளரையும் ''சேவை'' என்ற சொல் இலங்கை விஞ்ஞான சேவையையும் குறிக்கும்.

3. **எழுத்துப் பரீட்சை**.- இப்பரீட்சை பின்வரும் வினாப்பத்திரங்களை உள்ளடக்கியதாக அமையும் :

(1) நுண்ணறிவு சோதனை ;
(2) பொது வினாத்தாள்.

4. **பரீட்சைத் திகதி**.- இப்பரீட்சை 2013, ஒற்றோபர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க, இப்பரீட்சையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரத்தை செயலாளர் கொண்டுள்ளார்.

5. **வாய்மொழிப் பரீட்சை**.- எழுத்துப் பரீட்சையில் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றிய விண்ணப்பதாரர்களில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் போதுமானதென குறித்துரைக்கப்படும் உயர் மட்டத்திலான மொத்தப் புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளுக்காக சாதாரண நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும் திகதி செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

6. நியமனம் செய்யப்படுவோரின் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி என்பன அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கு இணங்கத் தீர்மானிக்கப்படும்.

7. **சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் நிபந்தனைகளுக்கும் (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1988, யூன் 07 ஆந் திகதிய 509/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட) விஞ்ஞான சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யப்படும் திருத்தங்களுக்கு உட்பட்ட வகையில் தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தி ஒருவர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கு நியமனம் செய்யப்படுவர். அதற்கிணங்க இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையது மாகும். தகுதிகாண் காலம் 3 வருடங்களாகும். அம்மூன்று (03) வருட காலத்தில் I ஆம் வினைத்திறமை காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். அத்துடன் நியமனத் திகதியிலிருந்து 6 வருட காலத்தினுள் II ஆம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். மேலும் நியமனம் கிடைத்து 5 வருடங்கள் பூர்த்தியடைய முன்னர் 2007.05.28 ஆந் திகதிய 07/2007 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு இணங்க அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெறுதல் வேண்டும்.

7.1 தன்னிடம் ஒப்படைக்கப்படும் பதவியில் கடமையினை உரிய தினத்தில் பொறுப்பேற்கத் தவறுமிடத்து மற்றும்/ அல்லது நியமிக்கப்படும் பதவியை அல்லது நியமிக்கப்படும் பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்க மறுக்கும் அல்லது பொறுப்பேற்பதைத் தவிர்க்கும் விண்ணப்பதாரர்களின் நியமனங்கள் இரத்துச் செய்யும் அதிகாரத்தை அரசாங்க சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது.

8. **கட்டமைப்பு மற்றும் மாதாந்த சம்பளத் திட்டம்**.- 2006.04.25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் எஸ்.எல் 1-2006 சம்பளத் தொகுதிக்கு இணங்க எஸ்எல் ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555.

இப்பரீட்சையின் மூலம் இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II தரம் II இற்கான ஆட்சேர்ப்புக்களே மேற்கொள்ளப்படுகின்றன.

9. **ஆரோக்கியம் மற்றும் நடத்தை**.- பரீட்சார்த்தி சுகாதார ரீதியில் உரிய தகைமைகளைக் கொண்டிருப்பதாகவும் சிறந்த நன்னடத்தை

உடையவராக இருப்பதாகவும் செயலாளர் திருப்தியடைதல் வேண்டும். அவர் சிறந்த கண் பார்வை உடையவராகவும் நாட்டின் எப்பாகத்திலும் பணிபுரிவதற்குப் பொருத்தமான உடல் ஆரோக்கியத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும். தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் வைத்தியப் பரிசோதனை ஒன்றுக்கு உட்படுத்தப்படுவர்.

10. **தகைமைகள்**.- இப்பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள்-

(i) இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;

(ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(iii) பட்டம் நடைமுறைக்கு வரும் திகதி மற்றும் இவ்வறிவித்தலின் கீழ் தேவையான அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் ;

(iv) இப்பதவிக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :

| திணைக் களம் | பதவி | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|
| சுகாதார சேவைகள் திணைக் களம் | 1. பூச்சியியலாளர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பூச்சியியல் பாடம் ஒன்றுடன் உயிரியல் விஞ்ஞானம் தொடர்பான (விசேட) பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br><br>அல்லது<br><br>(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பூச்சியியல் (பி. எச். டி./ எம். எஸ். சி./ தத்துவமாணி பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்) |

(v) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று குறைந்தபட்ச வயதெல்லை 22 ஆவதோடு உச்ச வயதெல்லை 35 ஆகவும் இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ் உச்ச வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது ;

(vi) ஏதேனும் சமயப் பிரிவொன்றின் துறவி எவரும் இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

11. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்கான கட்டணம் ரூபா 1,000 ஆகும். அதனை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் மாவட்ட/ பிரதேச செயலகமொன்றில் பரீட்சைத் திணைக்களத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைப்பதற்காகச் செலுத்துதல் வேண்டும். மாவட்ட/ பிரதேச செயலகமொன்றில் விண்ணப்பதாரியின் பெயரில் செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் ஒட்டுதல் வேண்டும். இக்கட்டணம் மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

12. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பங்கள் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக 8 1/2" x 12" (A4) அளவிலான கடதாசிகளில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படுதல் வேண்டும். இல. 1 முதல் 3.9 வரையான இலக்கங்களில் அடங்கும் விடயங்கள் முதலாம் பக்கத்திலும் 3.10 முதல் 6.0 வரையான இலக்கங்களில் அடங்கும் விடயங்கள் இரண்டாம் பக்கத்திலும், எஞ்சிய பகுதி மூன்றாம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதை விண்ணப்பதாரிகள் விசேடமாகக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பங்களில் குறிப்பிடும் தகவல்களைத் தமது கையெழுத்துக்களில் தெளிவாக எழுதுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாகத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும், முழுமையாகத் தகவல்கள் வழங்கப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும் (விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பத்தின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமைய முடியும்). பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்று விண்ணப்பதாரர்கள் சரிபார்த்துக்கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட முடியும்.

(ஆ) பரீட்சார்த்திகள் தாம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் மொழியிலேயே விண்ணப்பங்களை நிரப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்படுவது கட்டாயமாகும்.

(இ) பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை, "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம் (ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை), பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு 2013.08.05 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சுகாதார சேவைகள் திணைக்களத்தின் இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II தரம் II இன் பூச்சியியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013" என்று தெளிவாக எழுதுதல் வேண்டும். உரிய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளிலுள்ள அதிகாரம்பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலர் ஒருவரினால் அல்லது ரூபா 2,40,360 இற்கு அதிக வருடாந்த அடிப்படைச் சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரசாங்க அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(உ) விண்ணப்பங்கள் தொலைந்து போதல், தாமதமாகக் கிடைத்தல் என்பன தொடர்பில் எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி தங்களுக்கு அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக

பத்திரிகை அறிவித்தல் ஒன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அவ் அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். உம்மிடமுள்ள விண்ணப்பத்தினதும் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் பிரதிகளையும், பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டையும் உங்கள் கோரிக்கையின் பிரதியொன்றை உங்களிடம் வைத்துக்கொண்டு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவது பயனுள்ளதாக அமையும். கொழும்புக்கு வெளியில் எனின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் (ஃபக்ஸ்) இலக்கமொன்றையும் குறிப்பிட்டு அனுப்புங்கள் (தொலைநகல் இல. 011-2784232).

13. **பரீட்சைக்குத் தோற்றுதல்.**- (அ) விண்ணப்பங்கள் கிடைத்த அனைத்து ஆட்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை ஒப்படைத்தல் வேண்டும். தமது அனுமதி அட்டைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. பரீட்சையை நடாத்துதுல், பெறுபேறுகளை வெளியிடுதல் என்பன தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாக அமையும்.

(ஆ) பரீட்சார்த்தியொருவர் தமக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் உரிய பரீட்சை இலக்கத்தின்கீழ் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் பரீட்சையின் முதல் நாளில், தமது கையொப்பங்களை உறுதிப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்பற்றவேண்டிய சட்டத் தொகுதியொன்று இவ் அறிவித்தலின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறுமிடத்து அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்பட வேண்டி ஏற்படும்.

(இ) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் காணப்பட்ட, விண்ணப்பதாரர்களின் சேவை நிலையமே, பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் ஏற்புடையதாவதுடன் விண்ணப்பங்களை அனுப்பியதன் பின்னர் அது தொடர்பில் நிகழும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

**குறிப்பு.**- பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது எனக் கருதுவதற்கான ஆதாரமாக அமைய மாட்டாது.

14. **பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளம்.**- தாம் தோற்றும் அனைத்துப் பாடங்களின்போதும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடியவாறு பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பது அவசியமாகும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

15. **பிழையான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை.**- பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்பட முடியும். பரீட்சார்த்தி சமர்ப்பித்துள்ள ஏதேனும் ஒரு விடயம் பொய்யானது என அறிந்த நிலையில் அவர் அதனைச் சமர்ப்பித்திருப்பின், அல்லது ஏதேனும் ஒரு விடயத்தை வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் சேவையிலிருந்து நீக்கப்பட முடியும்.

16. இவ் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழு அறிவுறுத்தல்களுக்கு இணங்க செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

17. **பரீட்சை நடாத்தப்படும் முறை மற்றும் பரீட்சை மொழி மூலம்.**- (அ) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் மொழி மூலங்களில் நடாத்தப்படும். பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது ;

(ஆ) பரீட்சார்த்திகள் தாம் பட்டம் பெற்ற மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் ;

(இ) பரீட்சார்த்திகள் தாம் தகைமை பெற்ற பட்டத்திற்கான பாடங்களில் இரண்டு மொழிகளில் அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் சித்தியடைந்திருப்பின் அப்பட்டத்திற்கான பாடத்தில் அவர் அதிக எண்ணிக்கையான பாடங்களுக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் ;

(ஈ) பிரதான பாடங்களுக்கு ஒரு மொழி மூலத்திலும் மேலதிக பாடங்களுக்கு வேறு ஒரு மொழி மூலத்திலும் சித்தியடைந்துள்ள விசேட பட்டம் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் பிரதான பாடங்களில் சித்தியடைந்த மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியொன்றில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு.**- (i) மேலே (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்ட தகைமையுள்ள பட்டம் என்பது 10 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டத் தகைமையினைக் குறிக்கும் ;

(ii) பரீட்சார்த்திகள் தாம் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து வினாக்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும் ;

(iii) தமது விண்ணப்பங்களில் குறிப்பிட்டுள்ள மொழி மூலங்களை மாற்றுவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

18. **தெரிவுசெய்யப்படும் முறை.**- பின்வரும் வினாப்பத்திரங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவுசெய்யப்படுவர் :-

(i) நுண்ணறிவு (ஒரு மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

(ii) பொது வினாப்பத்திரம் (3 மணித்தியாலம்) - 100 புள்ளிகள் (இப்பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப்பத் திரத்திலும் பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளி 40% ஆகும்.)

*19.* **ஆட்சேர்ப்பு முறை**.- பூச்சியியலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை விதிகளுக்கமைய மேற்படி பதவிக்காக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தீர்மானத்துக் கமைய அவரிற்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதியளிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் தகைமைகள் பரீட்சிக்கப்படும். (நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவது நியமனம் கிடைப்பதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்தமைக்கான சான்றாக அமைய மாட்டாது.)

*19.1* **பெறுபேறுகளை வெளியிடுதல்**.- பரீட்சையில் ஒவ்வொரு பாடங்களிலும் 40% இற்கு குறையாத புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களை நிலவும் வெற்றிட எண்ணிக்கையின் சம அளவிலான எண்ணிக்கை அல்லது அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மூலம் விதந்துரைக்கப்பட்ட எண்ணிக்கை அடங்கலாக மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் ஒவ்வொரு பாடங்களுக்காகவும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் மற்றும் மொத்தப் புள்ளிகள் என்பவற்றை உள்ளடக்கிய பெறுபேற்று ஆவணம் ஒன்று தனிப்பட்ட ரீதியாகப் பெற்றுக்கொடுக்கப்படும்.

*20.* **பாடத்திட்டம்** :

(i) *நுண்ணறிவு (1 மணித்தியாலயம்)* - 100 புள்ளிகள்

பரீட்சார்த்திகள் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வு செய்யும் ஆற்றல், தீர்மானங்களை எடுக்கும் ஆற்றல், அனுமானிக்கும் ஆற்றல் என்பவற்றைச் சோதிக்கும் வகையில் இவ்வினாப்பத்திரம் அமையும். வினாப்பத்திரமானது பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளிக்கும் வகையிலான 50 வினாக்களைக் கொண்டிருப்பதோடு சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும் ;

(ii) *பொது வினாப்பத்திரம் (3 மணித்தியாலங்கள்)* - 100 புள்ளிகள்

அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய வகையில் விரிவான விஞ்ஞான விடயங்களை உள்ளடக்கிய கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும்.

*21.* இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ், ஆங்கிலப் பதிப்புக்கள் மத்தியில் முரண்பாடுகள் ஏதாவது காணப்படுமாயின் சிங்கள மொழிப் பதிப்பே மேலோங்கி நிற்கும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பி. பீ. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2013, யூன் 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார சேவைகள் திணைக்களத்தின் இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II தரம் II பூச்சியியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013**

Open Competitive Examination For Recruitment to Class II Grade II of Sri Lanka scientific Service, to the Post of Entomologist in Department of Health Serviec - 2013

[ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

1. மொழிமூலம் :
பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

* விண்ணப்பங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தில் நிரப்பப்படுதல் வேண்டும்.

2. விண்ணப்பிக்கும் பதவி :

| திணைக்களம் | பதவி |
|---|---|
| | |

3. தனிப்பட்ட தகவல்கள் :-

3.1 முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில், முதலெழுத்துக்கள் பெயரின் இறுதியில் இடப்படுதல் வேண்டும்) :----.
உதாரணம் : RANASINGHE R. M. A. K.

3.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :----.

3.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

3.4 தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3.5 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில், பரீட்சை அனுமதி அட்டை இம்முகவரிக்கே அனுப்பப்படும்) :
..............................................................................................
..............................................................................................
..............................................................................................

3.6 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :......................
..............................................................................................
..............................................................................................
..............................................................................................

3.7 தபால் நகரம் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :.............
..............................................................................................

3.8 பால் வேறுபாடு :
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

3.9 இனம் :
(சிங்களவர்-1, தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்-4, ஏனையோர்-5)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

3.10 விவாகமானவர்/விவாகமாகாதவர் :
விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

3.11 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.12 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. தகைமைகள் :

(i) பட்டம் பெற்ற திகதி ....................................... (இத்தகைமையைக் கொண்டுள்ளீரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தயவுசெய்து இவ் அறிவித்தலின் 10 (iv) பந்தியை தயவுசெய்து நன்றாக வாசித்துக்கொள்ளவும்.)

| பரீட்சை/ பட்டம் | வகுப்பு | வருடம் | பாடங்கள் | பல்கலைக் கழகம்/ நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | | | |

(ii) சித்தியடைந்துள்ள ஆகக்கூடிய பரீட்சை :-
சிங்களம் :----.
தமிழ் :----.
ஆங்கிலம் :----.

(iii) பாடசாலையிலிருந்து வெளியேறிய பின் ஆற்றிய தொழில் மற்றும்/ அல்லது பெற்ற பயிற்சி தொடர்பான விவரங்கள் (கடமையைப் பொறுப்பேற்ற மற்றும் நீங்கிய திகதிகள், மற்றும் நீங்கியமைக்கான காரணங்களைக் குறிப்பிட வேண்டும்) : ----.

(iv) தற்போது வகிக்கும் பதவி பற்றிய விபரம் :-

(அ) பதவி :----.
(ஆ) திணைக்களம்/நிறுவனம் :----.
(இ) நியமனத் திகதி :----.
(ஈ) நிரந்தர/ஓய்வூதியம் உரித்தான/ஓய்வூதியம் உரித்தற்ற/ தற்காலிகமானது என்பது தொடர்பானது :----.
(உ) பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா என்பது :----.
(ஊ) பதவிக்கான சம்பள அளவுத்திட்டமும் தற்போது பெறும் சம்பளமும் :----.

5. பணம் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை முறையில் ஒட்டுக :

> பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினைக் கழறாதவாறு இங்கு ஒட்டவும்.
> (பற்றுச்சீட்டின் பிரதியொன்றை உங்களிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.)

பற்றுச்சீட்டு இல. :----.
செலுத்திய அலுவலகம் :----.
திகதி :----.

6. ஏதேனும் குற்றம் ஒன்றுக்காக எப்போதாவது தவறிழைத்தவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் அக்குற்றத்திற்காக விதிக்கப்பட்ட தண்டனை பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக :----.

7. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

இங்கு குறிப்பிடப்பட்ட தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் உட்பட்ட வகையில் உண்மையானவை என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட .......................................... ஆம் இலக்கத்தைக் கொண்ட .............................................. ஆந் திகதிய பற்றுச்சீட்டினை இதில் ஒட்டியுள்ளேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சைச் சட்டதிட்டங்களுக்கு இணங்கச் செயற்படுவதற்கும், இப்பரீட்சையின் நிபந்தனைகளுக்கு இணங்க நான் தகுதியற்றவன் எனத் தெரியவருமிடத்து, பரீட்சைக்கு முன்னர் அல்லது அது நடைபெறும்போது அல்லது அதன் பின்னர் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச்செய்வதற்கு எடுக்கப்படும் யாதாயினும் தீர்மானங்களுடன் உடன்படுகின்றேன். மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

8. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்** (வர்த்தமானி அறிவித்தலின் 12(ஈ) இற்கு அமைவாக) :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ................................. (முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும், அதற்கான பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் ......................... .............. ஆந் திகதி எனது முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)
திகதி :----.

*9.* ***விண்ணப்பதாரி அரசாங்க சேவையில் உள்ளவர் எனின் திணைக்களத் தலைவரின் அறிக்கை :***

*மேலே பந்திய 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை/கீழே உள்ளவாறு திருத்தப்பட வேண்டும் என்றும் அவருடைய பணியும் நடத்தையும் .................................................. என்றும் நான் சான்றுபடுத்துகின்றேன். தற்போது வகிக்கும் பதவியில் இருந்து அவரை விடுவிக்க முடியும்/விடுவிக்க முடியாது.*

----,
*திணைக்கள/நிறுவன தலைவரின்*
*கையொப்பம்.*

*பதவி :----.*
*(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)*
*திகதி :----.*

*7-86*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**

**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**

**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**

**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.-*** *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை-2013***

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 05.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.06.2013 |
| | | வெள்ளி | 12.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.06.2013 |
| | | வெள்ளி | 19.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.07.2013 |
| | | வெள்ளி | 26.07.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.07.2013 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 02.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.07.2013 |
| | | வியாழன் | 08.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.07.2013 |
| | | வெள்ளி | 16.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.08.2013 |
| | | வெள்ளி | 23.08.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 08.08.2013 |
| | | வெள்ளி | 30.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.08.2013 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 06.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.08.2013 |
| | | வெள்ளி | 13.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.08.2013 |
| | | வெள்ளி | 20.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.09.2013 |
| | | வெள்ளி | 27.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.09.2013 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.